# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க,

# ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1981, நவம்பர் மாதம் 3 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*1981, நவம்பர் மாதம் 06 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : சதம் 20 தபாற் செலவு : சதம் 50

# 1981 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் (திருத்தச்) சட்டம்

[1981, நவம்பர் மாதம் 3 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

36/80
ச. வ.—ஓ.———
1409

**1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச் சட்டமானது, 1981 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"கூட்டுத்தாபனம், அமைச்சரவையால் அதனிடம் பொறுப்பிக்கப்பட்ட ஏதேனும் தொழிற்பாட்டைக்கொண்டு நடாத்துதல்.

2அ. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனம் எதுவும் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படக்கூடியவாருன ஏதேனும் தொழிலில் அல்லது வியாபாரத்தில் அல்லது ஏதேனும் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபடலாம் அல்லது ஏதேனும் தொழிலை அல்லது வியாபாரத்தை அல்லது ஏதேனும் வர்த்தகத் தொழிற்பாட்டைக் கொண்டு நடாத்தலாம்.".

3. இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினல், முதன்மைச் சட்டவாக்கத்தில் செய்யப்பட்ட திருத்தமானது, அச்சட்டவாக்கம் எந்தத் தேதியில் நடைமுறைக்கு வந்ததோ அந்தத் தேதியில் நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர், அச் சட்டவாக்கத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழில் அல்லது வியாபாரம் அல்லது வர்த்தகத் தொழிற்பாடு அல்லது கூட்டுத்தாபனத்தினல் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் தொழில் அல்லது வியாபாரம் அல்லது வர்த்தகத் தொழிற்பாடு, அதற்கிணங்க வலிதானமுறையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அல்லது கொண்டு நடாத்தப்பட்டிருப்பதாக கருதப்படுதலும் வேண்டும். திருத்தம் கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுதல்.

எ 58298 - 6,775 (09/81)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் தருயட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த.பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.